ஓய்வூதிய அறிவுறுத்தல்க் கடிதம் : 01/2020 2020.06.17

முப்படைத் தளபதிகள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்.

**<u>ஓய்வுபெற்ற ஆயுதப்படை அலுவலர்களின் சேவை ஓய்வூதியத்தை திருத்துவதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்தல்</u>**

மீளப் பணிக்கமர்த்தப்பட்டு ஓய்வுபெற்ற ஆயுதப்படை அலுவலர்களின் சேவை ஓய்வூதியத்தையும் குடியியல் மற்றும் ஆயுதப்படை ஓய்வூதியத்தையும் மீளாய்வு செய்வதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

02. அதற்கமைய, மீளப் பணிக்கமர்த்தப்பட்டதற்கான அடிப்படைச் சம்பளத் திருத்தங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின்படி பி.டி 06 விண்ணப்பங்களை ஆயுதப்படை அலுவலர்கள் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது திருத்தத்திற்கான காரணத்தை "மீள் பணிக்கமர்த்தல்" என்று குறிப்பிட வேண்டும்.

03. திருத்தப்பட்ட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டவுடன், திருத்தப்பட்ட ஓய்வூதிய கொடைப்பத்திரம் சம்பந்தப்பட்ட அதிகாரி பணியாற்றிய இராணுவ தலைமையகத்தால் வழங்கப்பட்டு அவை பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

04. பிரதேச செயலகம் ஓய்வூதியத் திருத்தத்தை இயங்கலையில் AR இனூடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் தற்போதுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளிற்கமைய நிலுவைத் தொகை அல்லது மேலதிகக் கொடுப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவை துல்லியமாகக் கணக்கிடப்பட்டு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

05. ஓய்வூதிய கொடுப்பனவுச் செயல்முறையை மிகவும் பயனுறு செயல்முறையாக்குவதற்கு தங்களால் தொடர்ந்து வழங்கப்படும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

ஒப்பம்
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த
2. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு – த.த.த
3. அனைத்து மாவட்டச் செயலாளர்கள். – த.த.த